ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2159/17 - 2020 ජනවාරි මස 22 වැනි බදාදා - 2020.01.22

*2159/17 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44(5) ஆம் உறுப்புரையின் பிரகாரம், என்னால் அரசியலமைப்பின் 44(1) ஆம் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சரின் பணிகள் மற்றும் செயற்பாடுகள் கீழ்தரப்பட்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் செயல்படுத்தப்பட வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

விமல் வீரவன்ச,
கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சர்.

*2019, திசெம்பர் 10.*



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

**கௌரவ தயாசிறி ஜயசேகர - கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும், நியதிச்சட்ட நிறுவனங்களும், அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. இரத்தினக் கற்கள், தங்கநகை கைத்தொழில் மற்றும் வர்த்தக மேம்பாடும் கண்காணிப்பும் | 1. தேசிய இரத்தினக் கற்கள் மற்றும் தங்கநகை அதிகார சபை | • தேசிய இரத்தினக் கற்கள் மற்றும் தங்க நகை அதிகார சபைச் சட்டம் (1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க) |
| 2. இரத்தினக்கல் மற்றும் தங்கநகைத் துறையைப் பாதிக்கும் தடைகள் மற்றும் சவால்களை சமாளிக்க உத்திகளை அறிமுகப்படுத்துதல் | 2. இரத்தினக் கற்கள் மற்றும் தங்க நகை ஆராய்ச்சி நிறுவனம் | |
| 3. உள்ளூர் கைத்தொழிலாக சர்வதேச அளவில் இரத்தினக்கல் மற்றும் தங்க நகைகளை பிரபல்யப்படுத்துவதற்கு தொடர்புடைய நிறுவனங்களுடன் இணைந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் | | |

02-36

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.